# யூதா எழுதின பொதுவான நிருபம்

## அறிமுகம்

யாக்கோபு, யோவான் மற்றும் பேதுரு ஆகியோர் எழுதின ஏழு நிருபங்கள் பொதுவான நிருபங்கள் என்று அழைக்கப்படுகிறது. பொதுவான நிருபம் என்று சொல்லும் போது ஒரு குறிப்பிட்ட சபைக்கோ நபருக்கோ எழுதாமல் சிதறப்பட்ட சபைகள் அனைத்திற்கும் எழுதப்பட்டதாகும் (யாக்கோபு 1:1,/ 1 பேதுரு1:1) . ஆனால் 1&2 யோவான் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கிறது.

பொதுவான நிருபம் என்கின்ற இந்த சொல் முதன்முதலில் சபை வரலாற்றில் ''யூசிபியஸால்'' பயன்படுத்தப்பட்டது (கி.பி 265 - 340).

- யூதாவின் நிருபம் புதிய ஏற்பாட்டின் நிருபங்களில் கடைசியாக உள்ளது.
- ஒரு சில காரணங்களால் இந்த புஸ்தகம் அனேகரால் புறக்கணிக்கப்படுகிறது.
  - மிகவும் சிறிய நிருபமாகவும், ஆசிரியர் தன்னைக் குறித்து அடையாளம் காட்டப்படாதவராக இருக்கிறார்.
  - அப்போஸ்தலர்களால் அங்கீகரிக்கப்படாத புஸ்தகத்திலிருந்து (non - canonical) சொல்லப்பட்டுள்ள மேற்கோள்கள்.
    - பிரதான தூதனாகிய மிகாவேல், மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப்பேசியது (வச.9)
    - ஏனோக்கின் தீர்க்கதரிசனம் (வச.14). யூதா இந்த காரியங்களை வேதாகமத்தின் வெளியில் உள்ள புத்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டுகிறார்.
- தவறுகளை கண்டிப்பதற்காக பயன்படுத்தப்படும் கடினமான சொல்லாகிய ''ஐயோ'' என்ற வார்த்தை இடம்பெற்றிருப்பதால் (வச.11)
- அனேக காரியங்கள் 2 பேதுரு இரண்டாம் அதிகாரத்தோடு ஒத்துப்போய் இருப்பதால்.

தற்போதைய விசுவாசிகளில் பெரும்பான்மையினருக்கு இந்த கடிதத்தைப் படிப்பது ஒரு இலாபகரமான படைப்பைக் காட்டிலும் குழப்பமானதாக இருக்கிறது. இது முதன்முறையாக படிப்பவர்களை சுத்தியல் அடியைப்போல் தாக்கும். ஆனால் மற்றவர்களுக்கு விசுவாசத்தைக் காத்துக் கொள்வதற்காக விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு எக்காள அழைப்பாக இருக்கிறது.

## ஆசிரியர் குறிப்பு

இந்த கடிதத்தின் ஆசிரியர் தன்னை "இயேசு கிறிஸ்துவின் வேலைக்காரன், யாக்கோபின் சகோதரன்" (வச.1) என்று அழைக்கிறார். ஆனால் ஆசிரியரின் சரியான அடையாளம் தெரியவில்லை. புதிய ஏற்பாட்டில் குறைந்தது ஆறு பேர் யூதா/யூதாஸ் என்று அழைக்கப்படுகின்றனர்.

1. தமஸ்குவை சேர்ந்த யூதா, பவுல் மனம் திரும்பியதும் இவனுடைய வீட்டில்தான் ஜெபம் செய்துகொண்டிருந்தார் (அப்போஸ்தலர் 9:11).
2. ஆரம்பகால திருச்சபையின் சபைகளில் முன்னணி நபராக இருந்த பர்சபா என்று மறுபேர்கொண்ட யூதா (அப்போஸ்தலர் 1:23; 15: 22,27); இவர் ஒரு தீர்க்கதரிசியும் கூட. (15:32).
3. கலிலேயனாகிய யூதாஸ் (அப் 5:37)
4. சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து (யோவான் 13:2,26)
   - மேற்கண்ட நான்கு பேரில் எவருமே இந்தக் கடிதத்தின் ஆசிரியராக கருதப்படவில்லை
5. அப்போஸ்தலன் யூதா - அப்போஸ்தலனாகிய யோவான் இவரை ஸ்காரியோத்தல்லாத யூதா என்று குறிப்பிடுகிறார் (யோவான் 14: 22)
   - லூக்கா இவரை யாக்கோபின் சகோதரர் என்று அழைக்கிறார் (லூக்கா 6:16, அப்போஸ்தலர் 1:13). ஆனால் மூலபாஷையாகிய கிரேக்க பாஷையில் யாக்கோபின் சகோதரன் என்று குறிப்பிடாமல் யாக்கோபின் மகன் (Judas of James) என்கின்ற நிலையில் குறிப்பிட்டுள்ளது. சீடர்களுடைய பட்டியலில்

மத்தேயும், மாற்கும் குறிப்பிட்டுள்ள ததேயு என்பவர்தான் இந்த யூதாவாக இருக்கலாம், ஆனால் லூக்காவால் குறிப்பிடப்படவில்லை.

- இந்த நிருபத்தை இந்த யூதா எழுதி இருக்கலாம் என்ற ஒரு கருத்து உள்ளது. யூதா 17ம் வசனத்தை வாசிக்கும் போது அப்போஸ்தலர்களால் முன் சொன்ன வார்த்தைகளை நினைவுக்கொள்ளுங்கள் என்று சொல்லிருக்கிறார். ஆசிரியர் அப்போஸ்தலராக இருந்தால் அதில் நாங்கள் சொன்ன வார்த்தைகளை என்று சொல்லிருப்பார்.ஆக இந்தக் கூற்று தவறானது.

6. இயேசுவின் சகோதரரான யூதா (மத் 13:55; மாற்கு 6:3).

- புதிய ஏற்பாட்டில் உள்ள யூதாக்களில் யாராவதுதான் இந்த கடிதத்தை எழுதியவர் என்றால், இது இவராகத்தான் இருக்க வேண்டும், ஏனென்றால் இவர் மட்டுமே "யாக்கோபின் சகோதரர்" என்று அழைக்கப்படுகிறார் (1:1). ஆனால் இதற்கு பல ஆட்சேபனைகள் உள்ளன: அவர் இயேசுவின் சகோதரர் என்றால், அவர் ஏன் தன்னை அடையாளம் காட்டவில்லை?

  இதற்கு நமது பதில்: கர்த்தருடைய சகோதரர்கள் முதலில் அவரை நம்பவில்லை (யோவான் 7:3,5); ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர்கள் அவரைப் பின்பற்றினார்கள் (அப்போஸ்தலர் 1:14). யூதா தனது ஆரம்பகால அவநம்பிக்கை காரணமாக தன்னை இயேசுவின் சகோதரராக அடையாளம் காட்ட தகுதியற்றவர் என்று உணர்ந்திருக்கலாம். ஆகவே அவர் தன்னை இயேசுவின் வேலைக்காரன் என்று மட்டுமே அழைக்கிறார்.
- அதுமட்டுமல்லாது யாக்கோபு ஆரம்பகால திருச்சபையில் மிகவும் பிரபலமாக காணப்பட்டார். ஆகவே பிரபலமாக காணப்பட்ட யாக்கோபோடு சேர்ந்து யூதா அறிமுகமாகிறார் (1:1). செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு சிரச்சேதம் பண்ணப்பட்ட பிற்பாடு (அப்போஸ்தலர் 12) இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபு எருசலேம் சபையில் தலைவராகவும், நன்கு அறிந்தவராகவும் காணப்பட்டார். ஆக, யூதா எருசலேம் சபையின் தலைவராக காணப்பட்ட யாக்கோபின் பாதி சகோதரனும் நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் பாதி சகோதரனும் ஆக இருக்கிறார்
- யூதா மாம்சத்தின்படி இயேசுவின் சகோதரராக இருந்தபோதிலும், மனத்தாழ்மையுடன் அவர் தன்னை 'இயேசுவின் அடிமை' என்று அழைக்கிறார், ஏனென்றால் இயேசுவானவர் இப்போது யூதாவின் சகோதரர் மட்டுமல்ல, ஆண்டவரும், எஜமானரும் ஆவார்.

மாம்சத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று பவுல் சொல்லுகிறார் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து...(பிலி 3:3-7). மாம்சத்தின் மீது நம்பிக்கை வைப்பதற்கு அவருக்கு அநேக காரணங்கள் இருந்தாலும் அவர் அதை செய்யவில்லை

மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.

- நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்,
- இஸ்ரவேல் வம்சத்தான்,
- பென்யமீன் கோத்திரத்தான்,
- எபிரெயரில் பிறந்த எபிரெயன்,
- நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்;
- பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்,
- நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்.

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன் என்கிறார் பவுல்.

**எழுதப்பபட்ட காலம்**

இது மிகவும் ஒரு குறுகிய கடிதமாக இருந்தாலும், எழுத்தாளர் தவறான உபதேசங்கள் குறித்துச் சாடுவதால், இது ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட கடிதம் அல்ல என்பதை அறியலாம்.

- பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை (வச.3) குறித்து பேசுகிறார்.
- வச.17 இல், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை நினைவில் வைக்கும்படி கேட்டுக்கொள்கிறார்.

இங்கே குறிப்பிட்டுள்ள முறையானது நீண்ட காலம் திரும்பிப் பார்ப்பது போல தெரிகிறது. மட்டுமல்லாது அப்போஸ்தலரில் யோவானைத் தவிர அனைத்து அப்போஸ்தலர்களும் கி.பி 70 க்குள் இறந்துவிட்டார்கள்

ஆகவே, மேற்கூறிய எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது யூதா கி.பி 60 முதல் 80 க்குள்எழுதப்பட்டிருக்கலாம்.

**முக்கிய வசனங்கள்:** வச.3,4

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகியஇயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது.

**முக்கிய வார்த்தை:** போராட்டம் (வச.3)

## எழுதப்பட்ட பின்னணியும் & நோக்கமும்

எல்லா கிறிஸ்தவர்களும் பகிர்ந்து கொள்ளும் விசுவாசத்தைப் பற்றி (பொதுவான இரட்சிப்பு) ஒரு கடிதம் எழுதுவது யூதாவின் ஆரம்ப நோக்கமாக இருந்தது. ஆனால் சபைக்குள் இரகசியமாக நுழைந்த சில கள்ளபோதகர்கள் தேவனுடைய கிருபையை வெளிப்படையான ஒழுக்கக்கேட்டிற்கான ஒரு சாக்காக மாற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டதுமல்லாமல், ஒன்றான மெய்தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலித்துவந்தனர்.

யார் இந்த கள்ளபோதகர்கள்?

இந்த கள்ளபோதகர்கள் குறித்து யூதா அதிகமாக எழுதவில்லை ஆனால் இக்கடிதத்திலிருந்து அவர்களைப் பற்றிய சில விஷயங்களை நாம் அறிந்துகொள்ளலாம். யூதா ஒரு இறையியலாளர் அல்ல, ஆனால் சபையின் நேர்மையான தலைவர் ஆவார். கள்ளபோதகர்கள் குறித்து விவரிப்பதை விட அவர்களை அதிகமாக கண்டிக்கிறார்.

1. ‘ஆன்டினோமியர்கள்’ (நியாயப்பிரமாணத்திற்கு எதிரானவர்கள்): நியாயப்பிரமாணம் இறந்துவிட்டது, நாம் கிருபையின் கீழ் இருக்கிறோம், எனவே நாம் விரும்பியதை நாம் செய்யலாம், எதுவும் தடை செய்யப்படவில்லை. மேலும், கிருபை நியாயப்பிரமாணத்தை விட உயர்ந்தது, அது மன்னிக்க முடியும் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

   அவர்கள் தேவனுடைய கிருபையை பாவம் செய்வதற்கு சாதகமாக பயன்படுத்தினார்கள். சோதோம் மக்களைப் போல வெட்கமில்லாத மற்றும் இயற்கைக்கு மாறான தீமைகளையும் அவர்கள் கடைப்பிடித்தார்கள். அவர்கள் மாம்சத்தைத் தீட்டுப்படுத்தினார்கள், அது பாவம் அல்ல என்று நினைத்தார்கள். திருச்சபை ஒருபோதும் ஆன்டினோமியனிசத்திலிருந்து விடுபடவில்லை என்பது வரலாற்றின் ஒரு சோகமான உண்மை. ஒவ்வொரு கிறிஸ்தவ தலைமுறையிலும் தேவனுடைய கிருபையின் பேரில் வர்த்தகம் செய்கிறவர்கள் இன்னும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.
2. நாஸ்டிக்ஸ் (ஞானிகள்)

   அவர்களின் அடிப்படை கொள்கை என்னவென்றால், இது உலகமானது இரு நித்திய கொள்கைகளைக் கொண்ட ஒரு இரட்டை பிரபஞ்சம் என்பதாகும்.

- ➢ தேவன் x சாத்தான்
- ➢ இருள் x வெளிச்சம்
- ➢ நல்லது x தீயது

- அவர்களின் கருத்து என்னவென்றால், காரியமானது அடிப்படையில் தீமையானது ஆனால் ஆவியோ அடிப்படையில் நல்லது. நன்மையும் தீமையும் ஒன்றாக சேர்ந்திருக்க முடியாது.
- தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே (கொலோ 2:21) - என்பது இவர்களின் கொள்கை
- படைப்பின் தேவனும், வெளிப்பாட்டின் தேவனும் மீட்பின் தேவனிடமிருந்து வேறுபட்டவர்.
- அவர்கள் அறிவின் அடிப்படையில் மக்களைப் பிரித்தனர்.
- ஒரு தேவன் ஆனால் பல அவதாரம் உள்ளன என்பது அவர்களின் கருத்து ஆனால் யூதா தேவன் ஒருவரே என்பதை முக்கியத்துவப்படுத்துகிறார் (வச.4,25)
  - ➢ அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தனித்துவத்தை மறுத்தனர்.
  - ➢ அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒருமையை மறுத்தனர்.
  - ➢ அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அவதாரத்தை மறுத்தனர்.
- அவர்களைப் பொறுத்தவரை இரட்சிப்பு என்பது இயேசு கிறிஸ்துவை நம்புவது மட்டுமல்ல. ஆத்மா நம் உடலில் சிறைப்பட்டுள்ளது. நீங்கள் அறிவைப் (விஷேசித்த அறிவு) பெறும்போது ஆன்மா விடுபடும்.
  - ➢ ஆனால் பேதுரு: நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2 பேதுரு 3:18).
  - ➢ பவுலும்: என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் (பிலி 3:8).

3. இவர்கள் தேவதூதர்களை மறுத்தனர் / இகழ்ந்தார்கள் (வச.8)
   "கர்த்தத்துவம் (Dominion)" என்ற சொல் தேவதூதர்களின் வரிசைமுறையை குறிக்கிறது. யூதர்கள் தேவதூதர்கள் மீதான நம்பிக்கை உள்ளவர்கள், ஒவ்வொரு தேசத்துக்கும், குடும்பத்துக்கும், தனிநபருக்கும் ஒரு தூதன் உண்டு என்று எண்ணுபவர்கள். வேதாகமத்தின் மூலம் தேவதூதர்கள் இருப்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம் ஆகவே அவர்களுக்கு விரோதமாக துணிகரமாக பேசக்கூடாது

முதலாம் நூற்றாண்டில் விசுவாசிகளின் நம்பிக்கைக்கு ஆபத்தை விளைவிக்கும் கள்ள போதகர்கள் மற்றும் ஆபத்தான மதங்களுக்கு எதிரான கொள்கைகளுக்கு எதிராக சபையை எச்சரிப்பதற்காக இது எழுதப்பட்டது.

## சிறப்பு அம்சங்கள்

1. இது யூதர்களின் தன்மையையுடையது. சுருக்கமாக மேற்கோள் காட்டப்பட்ட பல பழைய ஏற்பாடு பெயர்களும், இடங்களும் உள்ளன, அவை பழைய ஏற்பாடு பின்னணியைக் கொண்ட ஒரு யூதருக்கு மட்டுமே புரியும். உதாரணமாக: எகிப்து, சோதோம் & கொமோரா, கோரா, மோசே, காயீன், பிலேயாம், ஏனோக், ஆதாம் போன்றவை.
2. அதன் உள்ளடக்கம் எளிமையானது ஆனால் ஆழமானது. அதன் செய்தி நேரடியான மற்றும் கடுமையானதாக உள்ளது. உதாரணமாக: இவர்களுக்கு ஐயோ! (வச.11)
3. இது தெளிவானதாகவும், சித்திர பாணியிலும் அமைந்துள்ளது. உதாரணமாக: தண்ணீர் இல்லாத மேகங்கள் (வச..12,13)

## புத்தகத்தின் தொகுப்பு

1. வாழ்த்து (Vs.1,2)
2. கடிதத்திற்கான காரணம் (3,4)
3. கள்ளபோதகர்களுக்கு எதிரான எச்சரிக்கைகள் (5 - 16)
   - வரலாற்றில் தேவனுடைய தீர்ப்பின் உதாரணங்கள் (5 - 7)
   - தவறான ஆசிரியர்களின் விளக்கம் மற்றும் அழிவு (8 - 13)

- ஏனோக்கின் தீர்க்கதரிசனம் (14 - 16)

4. விசுவாசிகளுக்கான அறிவுரைகள் (17 - 23)
5. டாக்ஸாலஜி - கர்த்தரை துதித்தல் (24,25)

இந்த புத்தகம் வெளிப்படுத்தினவிசேஷத்திற்கு முன்பாக இருக்கிறது, அதனுடைய அர்த்தம்... கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக அநேகர் விசுவாசத்தைவிட்டு வழுவிப்போவார்கள்.

## புத்தகத்தின் விளக்கவுரை

### வாழ்த்துரை (வச.1,2)

***இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது: உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது***

யூதா என்றால் துதி என்று அர்த்தம்.

- யூதா என்பது எபிரேய வார்த்தை.
- யூதாஸ் என்பது கிரேக்க வார்த்தை.

ஆசிரியர் அறிமுகம் (வச.1)

யூதா தன்னை இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனாகவும் (தேவனோடு உள்ள உறவு), யாக்கோபின் சகோதரனுமாகவும் (மனுஷனோடு உள்ள உறவு) அறிமுகப்படுத்துகிறார்.

யூதா முதலாவது தன்னை தேவனோடும், பின்பு மனிதனோடும் இணைத்து காண்பிக்கிறார். எல்லா விசுவாசிகளுக்கும் இந்த இரண்டு வகையான உறவு அவசியமாக இருக்கிறது.

சங்கீதம் 92:12ல் இந்த இரண்டு வகையான உறவுகளை இரு மரங்களுக்கு ஒப்பிட்டு சொல்லப்படுவதை காணலாம்.

நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.

- பனைமரம் - இது கிளைகள் எதுவும் இல்லாமல் மேல்நோக்கி நேராக வளரக்கூடியது. இது தேவனோடு உள்ள உறவை காட்டுகிறது.
- கேதுரு மரம் - இது அநேக கிளைகளோடு பரந்து விரிந்து வளர கூடியதாக இருக்கிறது. இது மனிதனோடு உள்ள உறவை காட்டுகிறது.

யாருக்கு எழுதப்பட்டது

யூதா இந்த நிருபத்தை யாருக்கு எழுதுகிறார் என்று குறிப்பிடவில்லை. ஆனால் பொதுவாக விசுவாசிகளுக்கு எழுதுகிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:

| அழைக்கப்பட்டவர்கள் | பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் | காக்கப்பட்டவர்கள் |
|---|---|---|
| நீதிமானாகுதல் | பரிசுத்தமாகுதல் | மகிமைப்படுதல் |
| இரட்சிக்கப்பட்டோம்<br>கடந்த காலம் | இரட்சிக்கப்படுகிறோம்<br>நிகழ்காலம் | இரட்சிக்கப்படுவோம்<br>எதிர்காலம் |
| பாவத்தின்<br>தண்டனையிலிருந்து | பாவத்தின்<br>வல்லமையிலிருந்து | பாவத்தின்<br>சமூகத்திலிருந்து |
| தேவனுடைய வேலை | பரிசுத்த ஆவியின் வேலை<br>1 பேதுரு 1:2 | கிறிஸ்துவின் வேலை |

விசுவாசிகள் அனைவரும் இரட்சிப்பின் இந்த மூன்று அம்சங்களையும் பகிர்ந்துகொள்கிறார்கள்.

1. நற்செய்தியுடன் அழைக்கப்படுதல்
   இது எப்படிப்பட்ட அழைப்பு?

- பிலி 3:14 - உயர்வான (மேல்நோக்கி) அழைப்பு.
- II தீமோ 1: 9 - பரிசுத்த அழைப்பு
- எபிரெயர் 3: 1 - பரலோக அழைப்பு.

2. பரிசுத்தமாக்குதல் (பிரித்தெடுத்தல்)
அழைப்பு மற்றும் பரிசுத்தமாகுதல் இரண்டும் ஒன்றாகச் செல்கின்றன (2 தெச 2:13). அழைப்பு என்பது ஒருமுறை நடப்பது, ஆனால் பரிசுத்தமாக்குதல் வாழ்நாள் முழுவதும் நம் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் தொடர்ச்சியான செயல்முறையாகும்.
3. இயேசு கிறிஸ்துவில் பாதுகாக்கப்படுதல்
இந்த இரட்சிப்பு என்பது திரியேக தேவனின் செயலாகையால், நம்முடைய இரட்சிப்பை நாம் ஒருபோதும் இழக்க மாட்டோம் (நித்திய பாதுகாப்பு). இந்த செயல்முறையானது ஒருநாளில் தேவனுடைய முன்னிலையில் முழுமையடையும் (வச.24).

வச.2 - இரக்கம் சமாதானம் அன்பு (கிருபை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை) ஆனால் இந்த மூன்று விஷயங்களும் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகள் அல்லது தேவனுடைய கிருபையின் மூன்று முகங்கள் ஆகும்.

**<u>கடிதம் எழுதுவதற்கான காரணம் (வச. 3,4)</u>**

***பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகியஇயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது.***

யூதா பொதுவான இரட்சிப்பைப் பற்றி எழுத விரும்பினார் (சொட்டிரியாலஜி). ஏனெனில் இந்த இரட்சிப்பு மிகவும் முக்கியமானது; மிகவும் பெரியது (எபி 2:3); தீர்க்கதரிசிகள் அதைப் பற்றி மிகவும் கவனமாக ஆராய்ந்து பரிசோதனைப்பண்ணினார்கள் (1 பேதுரு 1: 9,10). பொதுவான இரட்சிப்பு என்றால் உலகளாவிய இரட்சிப்பு அல்லது அனைவருக்கும் இரட்சிப்பு என்பதாகும்.

- அப்போஸ்தலர் 11:19 - முதல் நூற்றாண்டில் சிதறிப்போன விசுவாசிகள் யூதர்களுக்கு மட்டுமே சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள்.
- ஆனால், லூக்கா 2:10ல் - "அனைவருக்கும் இரட்சிப்பு" என்று தேவதூதர்கள் சொல்வதை காணமுடியும்.
- 2 பேதுரு 1: 1ல் பேதுரு 'எங்களைப்போல (யூதர்கள்) அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு' (புறஜாதியார்) என்று குறிப்பிடுகிறார்.

எனவே இரட்சிப்பு என்பது அனைவருக்கும் பொதுவானது. ஆனால் யூதா இப்பொழுது இரட்சிப்பைக் குறித்து எழுத மனம் இல்லாமல் வேறு ஒரு காரியத்தைக் குறித்து எழுத விருப்பம் உடையவர் ஆனார்.

<u>ஏன் யூதா தனது விருப்பத்தை மாற்றினார்?</u>

விசுவாசிகளின் விருப்பத்திற்காக அல்ல, விசுவாசிகளின் 'தேவை' காரணமாக மாற்றிக்கொண்டார், ஒவ்வொரு போதகரும் (மேய்ப்பன்) தனது விசுவாசிகளின் (ஆடுகளின்) தேவையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

- ➢ தேவாலயத்திற்கு ஜெபிக்க சென்ற பேதுரு மற்றும் யோவானிடம், சப்பாணி எதிர்பார்த்தது பொன்னும் வெள்ளியும், ஆனால் அவனுடைய விருப்பத்தின்படி அவர்கள் செய்யாமல் அவனுடைய தேவையின்படி சப்பாணியாய் இருந்த அவனுடைய காலை சுகமாக்கி நடக்க வைத்தனர்.

யூதா இப்போது விசுவாசிகளுக்கு எழுத நினைத்தது விசுவாசத்தைக் குறித்து. இங்கு சொல்லப்பட்டுள்ள விசுவாசம் என்பது இரட்சிப்பிற்காக நாம் எடுக்ககூடிய முதல் படி அல்ல. இது ஒருவரின் நம்பிக்கைகளின் மொத்தமாகும்.

- பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது என்றால் இது கற்பனை அல்ல, வெளிப்பாடு ஆகும்.
- ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டது என்று சொல்லும்போது, இது முழுமையான மற்றும் இறுதியான வெளிப்பாடு ஆகும். இனி ஒரு புதிய வெளிப்பாடு இல்லை.
- மட்டுமல்ல இது தேவனுடைய உண்மை. அதனால் அது நித்திய மதிப்புடையது.

<u>திருச்சபையானது கிறிஸ்தவ விசுவாசத்தின் பாதுகாவலன்</u>

- உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1 பேதுரு 3:15). பதில் அளிக்க தயாராக இருப்பது மட்டுமல்ல நம்முடைய விசுவாசத்தை சிலர் தாக்குவதற்கு வரும்போது, பாதுகாக்கவும் வேண்டும் (எபே 6:16 - விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்).
- இது எளிதானது அல்ல, இது ஒரு போராட்டம். இது நேரடியான சரீர சண்டை அல்ல; ஆன்மீக சண்டை. பவுல் சொல்லுகிறார்: எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது (2 கொரி 10:4). சரீர ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் ஆன்மீக ஆயுதங்களைப் பயன்படுத்தவேண்டும். (ஜெபம், தேவனுடைய வார்த்தை). நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் (2 தீமோ 4:7) என்று தன்னுடைய வாழ்க்கையின் மாதிரியை காண்பிக்கிறார்.
- கள்ளபோதகர்கள் வருவார்கள் என்று முன்னறிவிக்கப்பட்டிருப்பதால் நாம் முன்கூட்டியே ஆயுதம் ஏந்தியவர்களாக இருக்க வேண்டும்.

<u>கள்ளப் போதகர்களின் சில தன்மைகள் (வச.4)</u>

1. விசுவாசத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்கள் (விசுவாச துரோகம்)
   - அவர்கள் இரகசியமாக பதுங்கி வருகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம், ஏனென்றால் பெரும்பாலான கள்ளப் போதகர்கள் சபைக்குள்ளிருந்தே வருகிறார்கள்.
2. ஆக்கினைக்குள்ளானவர்கள் (அவர்களின் முடிவு தீர்மானிக்கப்பட்டுள்ளது)
   - அப்போஸ்தலர் 13:48 - சிலர் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள்.
   - யோவான் 3:18 - சிலர் நித்திய அழிவுக்கு செல்ல நியமிக்கப்பட்டுள்ளனர்.

கள்ளப் போதகர்கள் விசுவாசிகளைப் போலவே இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை (மீண்டும் பிறக்கவில்லை).

3. பக்தியற்றவர்கள் (வச. 4,14,15)
   - தேவபக்தியற்ற செயல்கள்
   - தேவபக்தியற்ற வார்த்தைகள்
   - தேவபக்தியற்ற வழி
   - தேவபக்தியற்ற பாவிகள்
4. தேவனுடைய கிருபையை பாவத்திற்காக பயன்படுத்துகிறவர்கள்
   - நாம் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ தேவனுடைய கிருபையானது, எப்பொழுதுமே நமக்கு கிடைக்கிறது. பாவத்தில் விழாமல் நம்மை காப்பதற்கு அது போதுமானதாக இருக்கிறது.
   - தீத்து 2:11,12 - தேவகிருபையானது... நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.
     - (நகோமியும் அவள் குடும்பத்தினரும் பஞ்ச காலத்தில் மோவாபிற்குச் சென்றார்கள். ஆனால் அந்த நேரத்தில் போவாஸ் எருசலேமில் இருந்தார், ஆனால் அவர்கள் போவாஸைப் பற்றி சிந்திக்கவில்லை, மோவாபில்

ஏற்பட்ட துன்பங்களுக்குப் பிறகுதான் அவள் போவாஸைப் பற்றி நினைவில் வைத்திருந்தாள் - அதுபோல நாம் பாவம் செய்யாமல் இருப்பதற்கு தான் கிருபை கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் நாம் பாவம் செய்துவிட்டு தேவனுடைய கிருபையை பயன்படுத்தி மன்னிப்பு கேட்கிறோம்

5. அவர்கள் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தையும், தனித்துவத்தையும் மறுதலிக்கிறவர்கள்.
   - ➢ அறிவுபூர்வமாக கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்களுக்கு அவரைக் குறித்த தவறான எண்ணம் இருக்கிறது.

<u>கள்ளப் போதகர்களின் இரு சிக்கல்கள்</u>

- தவறான போதனை.
- தவறான வாழ்க்கை.

இவை இரண்டும் பிரிக்க முடியாத இணைப்பு. "நீங்கள் எதை நம்புகிறீர்களோ (போதனை) அப்படியே வாழ்கிறீர்கள்"

<u>கடந்தகால நிகழ்ச்சியிலிருந்து உதாரணங்கள் (வச.5 - 16)</u>

யூதா தேவனுடைய நியாயத்தீர்ப்பை மூன்று வரலாற்று சம்பவங்கள் மூலமாக எச்சரிக்கிறார்.

- இஸ்ரவேல் ஜனங்கள் (வச.5)
- தேவதூதர்கள் (வச.6)
- சோதோம் கொமோரா பட்டணத்தார் (வச.7)

யூதா இதை யூதர்களுக்கு எழுதுகிறார் ஆகவே இந்த சம்பவங்கள் அனைத்தும் தெரிந்தவர்கள்தான் (வச.5), எதுவும் புதிதானது அல்ல. ஆகவே ஆசிரியர் இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். ஏன் நினைவூட்டுவது அவசியமாக இருக்கிறது?

பிலிப்பியர் 3:1ல் எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும் என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆகவே, ஒரு காரியத்தை நினைவூட்டுவது நம்முடைய நலனுக்காகவும், எச்சரிக்கைக்காகவும் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

A. <u>இஸ்ரவேல் ஜனங்கள் (வச.5)</u>

*நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்.*

இங்கு இரட்சிப்பு என்கின்ற வார்த்தையானது - தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் என்பதை குறிக்கிறது - இது அவர்களுக்கு கிடைத்த சரீரபிரகாரமான விடுதலை. அவர்களுடைய நித்திய இரட்சிப்பைக் குறித்து ஆசிரியர் இங்கே குறிப்பிடவில்லை.

விசுவாசியாதவர்களை அழித்தார் என்று சொல்லும்போது வனாந்தரத்தில் தேவனுடைய வார்த்தையை விசுவாசியாத இஸ்ரவேலருக்கு கிடைத்த தண்டனையை குறிக்கிறது - இது அவர்களுக்கு கிடைத்த சரீரப்பிரகாரமான தண்டனை. எகிப்திலிருந்து புறப்பட்ட தலைமுறைகளில், யோசுவா மற்றும் காலேப் தவிர அனைத்து இஸ்ரவேல் ஜனங்களும் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள். அதற்கு காரணம் அவர்களிடத்தில் காணப்பட்ட அவிசுவாசமே.

இங்கே யூதா எந்த சம்பவத்தை மனதில் வைத்து பேசுகிறார் என்பது நமக்கு தெரியாது, ஒருவேளை எண்ணாகமம் 13 மற்றும் 14 ஆம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள கானான் தேசத்தை வேவு பார்க்கும்படியாக அனுப்பப்பட்ட சம்பவமாக இருக்கலாம்.

<u>அவநம்பிக்கையின் வார்த்தைகள்.</u>

- ஜனங்கள் பலவான்கள் (எண் 13:28)
- பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது (எண் 13:28)
- நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது (எண் 13:31)
- இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம் (எண் 13:33)

நம்பிக்கையின் வார்த்தைகள்.

- தேசம் மகா நல்லதேசம் (எண் 14: 7)
- நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம் (எண் 13:30)
- நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் (எண் 13:30)
- கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை (எண் 14:9)
  - ➢ அவிசுவாசம் என்பது ஒரு காரியத்தை எதிர்மறையாக பார்ப்பது (10 பேர்)
  - ➢ விசுவாசம் என்பது ஒரு காரியத்தை நேர்மறையாக பார்ப்பது (2 பேர்)

இரண்டு கூட்டமும் பார்த்தது ஒரே காரியத்தை தான் ஆனால் பார்த்த கோணங்கள் வேறு. பத்து பேர் அவிசுவாச கண்ணோட்டத்தோடு பார்த்தார்கள். இரண்டு பேர் விசுவாச கண்ணோட்டத்தோடு பார்த்தார்கள்.

- விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் (எபிரெயர் 11:6)
- பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள் (அப்போஸ்தலர் 12:5).
- பேதுரு விடுவிக்கப்படுகிறான் (அப் 12:11)
- ஆனால், சபையார் அதை விசுவாசிக்கவில்லை (12:15 - நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவருடைய தூதனாயிருக்கலாம் என்றார்கள்).

விசுவாசியின் வாழ்க்கையில் அவிசுவாசம் இருந்தால், அவர்களுக்கு பூமியில் வெற்றிகரமான வாழ்க்கை கிடைக்காது. அவர்கள் இரட்சிப்பை இழக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை இழப்பார்கள்.

- அவிசுவாசம் என்பது பாவமாகும் (ரோமர்14: 23 - விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே.)
- கானான் என்பது வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையின் சித்திரமே, அது பரலோகம் அல்ல!

நடைமுறை பாடங்கள்

- கிறிஸ்தவ ஆசீர்வாதங்கள் நமக்கு தானாக வழங்கப்படுவதில்லை, நாம் விசுவாசத்தினால் கானானுக்குச் சென்று அதை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- நேற்றைய வெற்றி நாளைய வெற்றிக்கு உத்தரவாதம் அல்ல.
- நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலிருந்துதான் (சபை - விசுவாசி) ஆரம்பமாகிறது (1 பேதுரு 4:17).

இன்றைக்கு சபைக்கு வெளியேவிட சபைக்குள்ளேதான் பாவம் அதிகமாக காணப்படுகிறது. ஆதித்திருச்சபையிலும் இதை காண முடியும் உதாரணமாக…

- ➢ கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய பங்கை கொடுக்காமல் வஞ்சித்து வைத்து பரிசுத்தஆவிக்கு விரோதமாக பொய்சொன்ன அனனியா, சப்பீராள் தம்பதியினர் (அப்போஸ்தலர் 5).
- ➢ தந்தையின் மனைவியுடன் உடலுறவு வைத்திருக்கும் விசுவாசி (1 கொரி 5:1).
- ➢ கர்த்தருடைய பந்தியில் தகுதியற்ற முறையில் பங்கேற்றவர்கள் (1 கொரி 11).

எனவே, நாம் விசுவாசத்தினால் வாழ கவனமாக இருக்கவேண்டும். நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் (2 கொரி 5:6). எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் (லூக்கா 17:5) என்பதுதான் சீஷர்களின் ஜெபமாக இருந்தது; நம்முடைய ஜெபமும் அதுவாக இருக்கட்டும்.

**B. தூதர்கள் (வச.6)**

*தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்.*

அவர்கள் அனுபவித்த ஆதிமேன்மையை விட்டுவிட்டவர்கள். அவர்களுக்கு இருந்த ஆதி மேன்மைகள் எவைகள்?

- அவர்கள் ஆவியாய் இருக்கிறார்கள்
- அவர்களுக்கென்று தேவனிடத்தில் விசேஷித்த வேலைகளும் காணப்பட்டன.
- அவர்கள் எப்பொழுதும் தேவனுடைய சமூகத்தில் காணப்பட்டார்கள்
- எப்பொழுதும் தேவனை ஆராதிக்க அவர்களாக இருந்தார்கள்

<u>ஆதிமேன்மையை விடுவதற்குக் காரணம் என்ன?</u>

அவர்கள் தாங்கள் இருந்த இடத்தை விட்டு விட்டு வேறொரு இடத்தை நோக்கி பார்த்ததே அதற்கு காரணமாய் அமைந்தது.

சாத்தானுடைய விழுதல் குறித்து ஏசாயா 14:12-15 மற்றும் எசேக்கியேல் 28:12-15 ஆகிய வேதபாகங்களில் அடையாளமாக விளக்கப்பட்டுள்ளன. சாத்தான் விழுந்தபோது அவன் தன்னுடனே மூன்றில் ஒரு பங்கான தூதர்களையும் எடுத்துக்கொண்டான் என்று வெளிப்படுத்தின விசேஷம் 12:4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. யூதா 6-வது வசனமும் பாவம் செய்த தூதர்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. ஆகவே வேதாகமத்தின்படி விழுந்துபோன தூதர்கள்தான் பிசாசுகள், அவைகள் சாத்தானோடு சேர்ந்து தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணுதலை தெரிந்துக் கொண்டன.

சாத்தானுடைய (லூசிபர்) மேன்மையை எசேக்கியேல் 28:12-15ல் காணலாம்.

- பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது.
- அபிஷேகம்பண்ணப்பட்ட கேருப், தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்.
- உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று (வச.17)

அவனது பாவத்தை ஏசாயா 14:12-15 ல் காணலாம்.

- நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,
- நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.
    - தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பிலே திருப்தி இல்லாதவன்.
    - மேட்டிமையினாலும், பெருமையினாலும் தன்னுடைய பதவியை இழந்தவன்.

விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (நீதி 16:18)

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5)

உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (மீகா 6:8).

**<u>மேட்டிமையினால் விழுந்துபோன மேலும் சிலர்:</u>**

1. உசியா இராஜா பலப்பட்டபோது, தனக்குக்கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம்மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான் (2 நாளா 26:16).
2. கர்த்தராகிய ஆண்டவர் ஏதோமைக் குறித்துச் சொல்லுகிறது என்னவென்றால்: கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது. நீ கழுகைப்போல உயரப்போனாலும் நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேனென்று கர்த்தர்சொல்லுகிறார் (ஒபதியா 1:1-4)
3. நேபுகாத்நேச்சார் தன் பெருமையினாலேயே விழுந்துபோனான்; அவன் பாபிலோன் ராஜ்யத்தின் அரமனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது: இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு

அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய் (தானியேல் 4:29 - 32)

ஒருசாரார் ஆதிமேன்மையை விட்டுவிட்ட தூதர்கள் என்பவர்கள் ஆதியாகமம் 6 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 'தேவ குமாரர்கள்' என்று கூறுகிறார்கள். அது முற்றிலும் தவறானது அதற்கான விளக்கங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

''மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள்பிறந்தபோது: தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப்பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்'' (ஆதியாகமம் 6: 1,2).

தேவகுமாரர், மனுஷகுமாரத்திகள் யார் என்ற கேள்விகள் பல நூற்றாண்டு காலங்களாக விவாதத்திற்கு உரிய பகுதி. வேதாகமத்தில் எந்த வசனமும், எந்த வேத பகுதியும் நம்முடைய வாழ்வில் விசுவாசத்தை வளர்க்கவும், கர்த்தருக்குள் வளரவுமே எழுதப்பட்டுள்ளது. வேதாகமத்திற்கு மிஞ்சிய வேத விளக்கங்கள் எப்போதும் நம்முடைய விசுவாச வாழ்வை சோர்வடையச் செய்து, விசுவாச வாழ்வையே கேள்வி குறியாக்கிவிடும். இப்படிப்பட்ட வேத பகுதியை விளக்க முயற்சிக்கும்முன் இவைகளை கட்டாயம் மனதில் வைக்கவேண்டும்.

இங்கு தேவகுமாரர், மனுஷகுமாரத்திகள் என்று பிரிவினைச் சொற்கள் பயன்படுத்துவதற்கு காரணம். தேவனை அறிந்து, தேவனுடைய வழிகளில் நடப்பவர்களையும், தேவனை அறியாது தேவனுடைய வழிகளில் நடக்காதவர்களையும் வேறுபடுத்தி, அடையாளப்படுத்தவே. சேத்தின் நாட்களில் மனுஷர் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளஆரம்பித்தனர் (ஆதி 4:26). இவ்வாக்கியம் மூல எபிரேய மொழியில் அவர்கள் தங்களை கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு அழைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள் என்று பொருள்படுகிறது. எனவே அவர்கள் தேவகுமாரர்கள் என்று அழைக்கப்பட்டனர். காயினின் பிள்ளைகள் மனுஷகுமாரர்கள் என அழைக்கப்பட்டனர்.

- முதலாவது நாம் புரிந்து கொள்ள வேண்டியது, மனிதர்களுக்கு மட்டுமே தேவபிள்ளைகள் அதாவது குமாரர் என்ற அதிகாரம் உண்டு. தேவதூதர்களுக்கு ஒருபோதும் வேதம் தேவபிள்ளைகள் என்ற அதிகாரத்தை கொடுக்கவில்லை.
- தேவதூதர்கள் ஆண்பால், பெண்பால் உள்ளவர்கள் அல்ல.
- ''மரித்தோர் உயிரோடே எழுந்திருக்கும்போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவதூதரைப்போலிருப்பார்கள்;'' (மாற்கு 12:25).
- ''அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப்பிள்ளைகளுமாயிருப்பார்கள்'' (லூக்கா 20:36).

''அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்றமனுஷராகிய பலவான்களானார்கள்'' (ஆதியாகமம் 6:4). இந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ள ''இராட்சதர்'' என்ற வார்த்தை இரண்டு விதங்களில் பயன்படுத்தலாம்.

- சராசரி மனிதர்களை விட மிகவும் உயரமான, பருமனான மனிதர்களை குறிப்பிட பயன்படுத்தப்படும்.
- பொல்லாத செய்கைகளை செய்கிறவர்களையும், எதற்கும் அடங்காதவர்களையும் குறிக்கவும் பயன்படுத்தப்படும்.

ஆதியாகமம் 6ம் அதிகாரத்தின் சம்பவங்கள், ஆதாமில் இருந்து 9ம் தலைமுறைகளுக்கு பின்புதான் நடப்பதாக வேதம் கூறுகிறது.

4ம் அதிகாரத்தில் காயீனின் 6 தலைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. 5ம் அதிகாரத்தில் சேத்தின் 9 தலைமுறைகள் காட்டப்படுகிறது. அதாவது... ஆதாம், ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்டதில் இருந்து, நோவாவின் காலத்தில் நடந்த வெள்ளப்பெருக்கு

வரை கிட்டத்தட்ட 2000 வருட இடைவெளி இருப்பதாகவேத வல்லுனர்கள் சொல்லுகிறார்கள். ஆதியாகமம் 6ம் அதிகாரம் வரை சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் இந்த இரண்டு தலைமுறைகளும் பிரிந்தே வாழ்ந்து வருகிறது. காயீன் தேவ சமூகத்தை விட்டு பிரிந்து தேவனற்றவனாக வாழ்ந்ததினால் அவனுடைய சந்ததிகளும் தேவனற்றவர்களாக அக்கிரமசெய்கைக்காரர்களாக வாழ்ந்து வருகின்றனர். சேத்தின் சந்ததியினர் தேவனோடு இணைந்து தேவனை அறிந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இந்த இரண்டு தலைமுறையினரும், எந்த விதத்திலும் சம்மந்தம் கலவாதவர்களாக இருந்தவர்கள். 6ம் அதிகாரத்திற்குப் பின்பாக திருமணபந்தங்கள் மூலமும், தகாத உறவின் மூலமும் இணைவதினால், அது தேவனுக்கு பிரியமில்லாத செயலாக மாறுகிறது. அது மட்டுமல்ல, அவர்களுக்கு பிறக்கிற பிள்ளைகள் இன்னும் அக்கிரமமிகுதி உள்ளவர்களாக வாழ ஆரம்பிக்கின்றனர். இதனால் தேவனுடைய திட்டங்களும் தேவனுடைய சித்தமும் பாழ்படுத்தப்படுகிறது. ‘‘மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது (ஆதியாகமம் 6:5,6). இந்த 6ம் அதிகாரத்தின் வசனங்கள் நமக்கு தொடர்ச்சியாக எழுதப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு வசனமும் ஒவ்வொரு கால கட்டத்தின் சம்பவங்கள் என்பதை முதலாவது புரிந்து கொள்ள வேண்டும்.

தேவனை அறிந்த சேத்தின் சந்ததியும், தேவனை அறியாத காயீனின் சந்ததியும் ஒன்றாக கலக்கும் போதே அக்கிரமங்கள் பெருக ஆரம்பிக்கிறது. படிப்படியாக முழுவதுமாக தேவனை விட்டுவிலகி, மனிதர்களுக்குள் அக்கிரமம் பெருகியதால், தேவன் பூமியில் உள்ள மனிதர்களை அழிக்க முடிவெடுக்கிறார். அழிவிற்கு அதுவே காரணமாக அமைந்து விட்டது. மாறாக தேவகுமாரர்கள் எனப்படுகிறவர்கள் தேவதூதர்கள் என்று வியாக்கியானம் செய்வது வேதத்தின் முறைமைகளுக்கு எதிராகவே இருக்கிறது. தேவ தூதர்களுக்கு மனிதர்களைப்போல் இரத்தமும், சரீரமும் இல்லை, சந்ததியை விருத்தியடையச் செய்யும் வித்து அவர்களுக்குள் இல்லை. தேவகுமாரர்கள் என்ற வார்த்தை தேவனை அறிந்து தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றும் தேவமக்களையே குறிப்பிடுகிறது. மனுஷகுமாரத்திகள் என்ற வார்த்தை தேவனை அறியாத தேவனுடைய வழிகளில் நடக்காத மக்களையே குறிப்பிடுகிறது.

தேவ தூதர்கள் மனுஷ குமாரத்திகளோடு கூடினார்கள் அதினால்தான் இராட்சத பிறவிகள் பிறந்தார்கள் என்று ஆதியாகமம் 6ம்அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று வியாக்கியானம்செய்தால்… நோவா காலத்தில், தேவன் நோவாவின் குடும்பம் தவிர எல்லா மனிதர்களையும் மாண்டு போகசெய்து, நோவாவின் குடும்பத்தின்மூலமாகவே மறுபடியும் புதுமனித சந்ததியை உருவாக்கினார். அப்படியானால் எண்ணாகமம் 13:33, உபாகமம் 2:11,20; 3:11,13; யோசுவா13:12; 2 சாமுவேல் 21:16,18,20,22 இந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள இராட்சதர்கள் யாருக்குப் பிறந்தவர்கள்? தேவகுமாரர்களுக்கும் மனுஷகுமாரத்திகளுக்கும் பிறந்தவர்களா? அப்படியானால் தொடர்ந்து தேவ தூதர்கள் மனிதர்களோடு பாலியல்உறவில் ஈடுபட்டார்களா? என்ற கேள்வி எழும்பும் எனவே, வேதாகமத்தைவாசிக்கும் போது எல்லாவற்றையும் நம்முன் கொண்டு வருவது நல்லது. மேலும் ஆதியாகமம் 6.3ல் அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, என்றுசொல்லுகிறார். பாவத்தை செய்தது தேவதூதர்களானால் தேவன் மனிதனுக்குத் தண்டனை விதிப்பது ஏன்?

தேவகுமாரர்கள், தேவதூதர்களையே குறிக்கிறது என்று சொல்லுகிறவர்கள் ‘‘தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்தியசங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்’’ (யூதா 6) என்ற இந்த வசனத்தையே ஆதாரமாக வைக்கிறார்கள்.

ஆனால் இந்த வசனம் தேவனுக்கு விரோதமாக எழும்பி, பெருமையினால் விழுந்துபோன தேவதூதர்களையே குறிப்பிடுகிறது. அதுதான் சாத்தானின்கூட்டம். மேலும் பழைய ஏற்பாட்டில் சில சமயங்களில் தேவதூதர்கள் மனித ரூபத்தில் காணப்பட்டார்கள் என்று வேதம் கூறுகிறது. அதைவைத்து தேவதூதர்கள் பாலினஉறவில் ஈடுபட்டார்கள் என்ற

வாதத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது காரணம், அவர்கள் குறிப்பட்ட அந்த வேலைகளுக்கு மட்டுமே மனிதவடிவில் தெரிந்தார்கள், மற்றபடி மனிதர்களோடு மனிதர்களாக வாழவில்லை. அவர்களுக்கு மனிதர்களைப்போல உணர்வுகள் இல்லை. மேலும் மனிதர், ராட்சதர், தேவ குமாரர் என்று தனி தனி இனங்கள் பூமியில் இருந்தது, என்று சொல்லுவது மற்ற புராணங்களை மனதில்வைத்து கற்பனை வடிவம் கொடுக்க முயற்சிப்பது ஆகும். அதற்கு வேதாகமத்தில் எந்த ஆதாரமும் இல்லை. ஆகவே தெளிவாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய பதில் தேவகுமாரர் என்பவர்கள் சேத்தின் சந்ததியினரே.

எனவே வேதத்திற்கு மிஞ்சிய வியாக்கியானம் வேதத்திற்கு விரோதமானதும், வேதாகம விசுவாசத்தை கேள்விக்குறியாகவும் மாற்றிவிடும் என்பதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

அதுபோல யூதா 6ம் வசனத்தில் “மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்”. என்பதை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. இது அவர்களின் வல்லமை, அதிகாரம், பொறுப்பு ஆகியவைகளை செயல்படமுடியாதபடி தேவன் அதை அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டார் என்பதே விளக்கமாகும்.

- 1 பேதுரு 2:9ல் 'அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவர்" என்று வாசிக்கிறோம். இங்கு 'அந்தகாரம்' என்பது பாவத்தை குறிகிறதே அல்லாமல் அந்தகாரம் என்ற இருளில் இருந்ததாக அர்த்தமில்லை.
- 1 யோவான் 2:11-னை ஒப்பிட்டு பார்க்கவும் அங்கே இருள் என்பது பாவத்தை குறிக்கிறது. 1 யோவான் 3:8ல் பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என்று வாசிக்கிறோம். இங்கு மனிதனை (பாவம் செய்கிறவனை) பிசாசு உண்டாக்கினான் என்று அர்த்தமல்ல, பாவம் செய்கிறவன் அவனுக்கு அடிமையாக இருக்கிறான் என்பதே அதனுடைய விளக்கம்.

‘ஆதிமேன்மை’ என்று சொல்லும்போது அவர்களுடைய பரிசுத்தம், தேவ பிரசன்னம் மற்றும் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் ஆகியவைகள் அவர்களிடத்தில் இருந்தது. ஆனால் இப்பொழுது அவைகள் எடுக்கப்பட்டு அவர்கள் தண்டனைக்காக வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதே அர்த்தமாகும். இன்றைக்கும் பிசாசும், அவனுடைய தூதர்களும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் தேவனுடைய அனுமதி இல்லாமல் அவர்கள் எதையும் செய்ய முடியாது (யோபு 1:6-12 & 2:1-7).

ஆக முடிவுரையாக யூதா 6ம் வசனம் மற்றும் 2 பேதுரு 2:4ல் சொல்லப்பட்டபடி விழுந்துபோன தூதர்கள் “கட்டப்பட்டு அந்தகாரத்தில் வைத்திருக்கிறார்கள் என்பது” அவர்களுக்கு இருந்த ஆதிமேன்மையை அதாவது பரிசுத்தம், வல்லமை, அதிகாரம் மற்றும் தேவனுடைய பிரசன்னம் இவைகளை இழந்து இருக்கிறார்கள் என்பதே அதனுடைய அர்த்தமாக இருக்கிறதே தவிர, நேரடியாக கட்டி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளமுடியாது.

வெளி 20:2 - பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.

இங்கு சாத்தான் ஆயிரம் வருடம் கட்டி வைக்கப்பட்டு இருக்கிறான் என்பது அவன் ஆயிரம் வருடம் செயல் பட முடியாது என்பதையே காட்டுகிறது

**C. <u>சோதோம் மற்றும் கொமோரா</u> (வச.7)**

*அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப் போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.*

- சோதோம் என்பதன் பொருள் சுண்ணாம்பின் இருப்பிடம் அல்லது எரித்தல் என்பதாகும்.
- கொமோரா என்பதற்கு முழுகுதல் அல்லது பிளவு என்பது பொருளாகும்.

இவைகள் இரட்டை நகரங்கள் என்று அழைக்கப்படுகிறது. வேதாகமத்தில் இந்த இரண்டு பட்டணங்களையும் சேர்ந்தே குறிப்பிடுவதை அனேக இடங்களில் காணமுடியும் (உபா 29:23; ஆமோஸ் 4:11; ஏசாயா 13:19; எரேமியா 49:18; புலம்பல் 4:6; 2 பேதுரு 2:6). கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது (ஆதி 13:10).

<u>சோதோமின் பாவம்</u>

அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப் போல் விபசாரம்பண்ணி, அந்நிய (ἑτέρας) மாம்சத்தைத் தொடர்ந்து…தேவதூதர்கள் மனுஷகுமாரத்திகளை திருமணம் செய்தார்கள் என்பதற்கு ஆதாரமாக இந்த வசனத்தையும் சிலர் மேற்கோள் காட்டுகிறார்கள்.

a. இதில் அவர்களைப்போல் என்பது தூதர்களை குறிப்பதாகச் சொல்கிறார்கள்.
    - ஆனால் அவர்களைப்போல் என்பது தூதர்களை அல்ல சொப்பனக்காரர்கள் அதாவது தவறான உபதேசத்தை போதிக்கிறவர்களை குறிப்பிடுவதாக சொல்லுகிற ஒரு கருத்து உண்டு.
    - மற்றொரு கருத்து இந்த அவர்களைப்போல… என்பது அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களை குறிப்பதாக கூறுகிறார்கள்.

எப்படியோ… என்னுடைய தனிப்பட்ட கருத்து அவர்களைப்போல் விபச்சாரம்பண்ணி என்று சொல்லியிருக்கிறது தூதர்கள் விபச்சாரம் பண்ணவில்லை, திருமணம்தான் செய்தார்கள். ஆக, இது தூதர்களை குறிப்பது அல்ல.

b. அடுத்தபடியாக அந்நிய மாம்சத்தை தொடர்ந்து… என்று வாசிக்கிறோம் தூதர்கள் அந்நிய மாம்சமாகிய மனுஷகுமாரத்திகளை தெரிந்து கொண்டதாக மேற்கோள் காட்டுகிறார்கள். அந்நிய மாம்சத்தை மனுஷகுமாரத்திகளுக்கு ஒப்பிட்டு மேற்கோள் காட்டுகிறார்கள்.
    - அந்நிய மாம்சம் என்று சொல்லும்பொழுது அப்போஸ்தலர் 2:4ல் இதே கிரேக்க பதமானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுடைய அர்த்தம் அந்நிய என்று சொல்லும்பொழுது வேறுபட்ட என்று அர்த்தம். அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் அவர்களுடைய பாஷை அல்லாமல் வேறுபட்டபாஷை பேசினார்கள். அதுபோல இங்கு சோதோம் கொமாரா பட்டணத்தார், ஆணும் பெண்ணுமாக உறவு கொள்ளவேண்டும் என்கிற இயற்கையான நியதியை மாற்றி ஆணோடு ஆண் என்கின்ற நிலைமையிலே புணர்ச்சி கொண்டார்கள் அதைத்தான் இங்கே யூதா குறிப்பிடுகிறார்.

இப்பட்டணத்தின் மிகமோசமான பாவம்… ஆணோடு ஆண் சேர்வதாகும் அதாவது ஓரினச்சேர்க்கை; இயற்கைக்கு அப்பாற்பட்ட பாலியல் தொடர்பு. இப்படிப்பட்ட பாவத்தை தேவன் கண்டிக்கிறார் (ரோமர் 1:27).

இங்கு யூதா ஆதியாகமம் 19ல் உள்ள சம்பவத்தை குறிப்பிடுகிறார். எசேக்கியேல் 16:49 சோதோமின் மற்ற பாவங்களைப் பற்றியும் கூறுகிறது: கெர்வமும், ஆகாரத்திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம். பாலியல் சீரழிவு மட்டும் அவர்களின் பாவம் அல்ல, ஏழைகளின் கையை பலப்படுத்தவில்லை என்பதையும் இங்கு காணலாம். அவர்களுக்கு பொருள் செழிப்பு இருந்தபோதிலும், அவர்கள் பாவம் செய்தார்கள், நியாயந்தீர்க்கப்பட்டார்கள். ஆதியாகமம் 19 - ல், சோதோம் மற்றும் கொமோரா ஆகியவை வானத்திலிருந்து நெருப்பால் அழிக்கப்பட்டன. ஆனால் அது அவர்களின் தீர்ப்பின் முடிவாக இல்லை. ஆதியாகமம் 19ல் நடந்ததை விட மிகமோசமாக, அவர்கள் நித்திய நெருப்பின் பழிவாங்கலை அனுபவிப்பார்கள்.

இந்த எடுத்துக்காட்டு இரண்டு படிப்பினைகளைத் தருகிறது. முதலாவதாக, சோதோம் மற்றும் கொமோரா ஒரு காலத்தில் பிரமாதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தாலும், இறுதியில் அழிக்கப்பட்டதுபோல போலவே, பாவம் செய்யும் விசுவாசி கடந்த காலத்தில் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். இரண்டாவதாக, நாமும் இயேசுவோடு தொடர்ந்து நடக்க வேண்டும் என்று அது எச்சரிக்கிறது. எப்படியெனில் ஒரு விசுவாசியின் கடந்தகால ஆசீர்வாதங்கள் அவர்களின் எதிர்கால ஆன்மீக நிலைக்கு உத்தரவாதமாக இருக்காது.

<u>அவர்களுடைய பாவத்தின் விளைவுகள்</u>

- சோதோம் கொமாரா பட்டணத்தின் பாவத்தின்நிமித்தம் தேவன் அவர்களை நியாயம்தீர்த்தார். சோதோம் கொமோரா பட்டணம் இருந்த இடத்தில் இன்று சவக்கடல் காணப்படுகிறது.
- இந்த இரட்டைப் பட்டணங்கள் மற்றும் அதனுடைய அருகில் இருக்கக்கூடிய பட்டணங்களும் வரைபடத்தில் இருந்து முற்றிலுமாக எடுக்கப்பட்டுவிட்டது.
- சவக்கடலில் அதிகமான அமிலத்தின் நிமித்தமாக அங்கே மீன்கள் உயிர்வாழ முடியாது.
- அந்த இடத்தில் மிகப்பெரிய ஒரு பிளவு ஏற்பட்டு எல்லா தண்ணீர்களும் அந்த இடத்தில் ஒன்றாக கூடியதின் நிமித்தமாக அந்த தண்ணீர் உப்பாக மாறிப்போனது.

இந்த பூமியிலேயே அதிகமான உப்புத் தன்மை உடைய தண்ணீர் உள்ள இடம். மிக தாழ்வான பகுதியாக கடல் மட்டத்திலிருந்து 400 மீட்டருக்கு கீழே உள்ளது. ஆனாலும் அனேக இயற்கை செல்வங்கள் கிடைக்கும் இடமாக உள்ளது.
தேவன் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றுகிறார் என்று நெகேமியா 13:2ல் வாசிக்கிறோம்.
<u>சவக்கடலில் (உப்புக்கடல்) கிடைக்கக்கூடிய கனிமங்கள்</u>

- மக்னீசியம் குளோரைட் 53%,
- பொட்டாசியம் குளோரைட் 37%,
- சோடியம் குளோரைட் (சாதாரண உப்பு) 8%,
- பல்வேறு உப்புக்கள் 2%

❖ தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் தண்டித்தார்
❖ தூதர்களை அவர்களுடைய பெருமையும் நிமித்தமாக தண்டித்தார்
❖ சோதோம் கொமாரா பட்டினத்தாரை அவர்களுடைய ஒழுக்கக்கேடு நிமித்தமாக தண்டித்தார்

நாம் பாவத்தை எப்படி பார்க்கிறோம்?
தேவன் பாவத்தை மிகவும் கண்டிப்போடு பார்க்கிறார். யோசேப்பு பாவத்தை பார்க்கும்பொழுது ''தேவனுக்கு விரோதமாக இத்தனை பெரிய பொல்லாங்கு எப்படி செய்வேன்'' என்று சொல்லுகிறான் (ஆதி 39:9)

**<u>கள்ளப்போதகர்களின் குணாதிசயங்கள் (வச.8 - 10)</u>**

*அப்படிப்போலவே, சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள். பிரதான தூதனாகிய மிகாவேல், மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப்பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்:கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான். இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷிக்கிறார்கள்; புத்தியில்லாத மிருகங்களைப்போல சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.*

இங்கே கள்ளப்போதகர்களை அடையாளம் கண்டு கொள்ளும்படியாக சில காரியங்களை யூதா குறிப்பிடுகிறார்.

1. அவர்கள் சொப்பனக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் (வச.8)
   - இவர்கள் விசுவாசிகளை விசுவாசத்தினின்று வழிவிலக செய்கிறார்கள் (உபாகமம் 13:1 - 3). யூதா நான்காம் வசனத்தில் குறிப்பிட்டதுபோல இவர்கள் பக்க வழியாய் நுழைகிறார்கள்.
   - அவர்கள் வேஷம் தரித்தவர்கள். வெளித்தோற்றம் வேறு; குணாதிசயம் வேறு.
   - இவர்கள் உண்மையை கூறுவதில்லை. இவர்கள் சபையை தங்கள் சொந்த லாபத்திற்காக பயன்படுத்துகிறவர்கள்.
2. சரீரத்தை (மாம்சத்தை) அசுசிப்படுத்திக்கொள்கிறார்கள் (வச.8)
   - உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (1கொரி6:19)

- நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து (1 தெச 4:3 - 5)
- ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம் (1 கொரி 3:17)
- பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2 கொரி 7:1)

3. கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறார்கள் (வச.8)
    - இவர்கள் அதிகாரத்தை புறம்பே தள்ளுகிறார்கள். இவர்களுக்கு மேலாக தேவனுடைய அதிகாரமோ மற்றும் மனுஷனுடைய அதிகாரமோ இருக்க கூடாது என்று விரும்புகிறார்கள். இப்படி இருக்குமானால்... அவரவர் தன்சொந்த விருப்பத்தின்படியாக நடப்பார்களேதவிர ஒழுங்கின்படி வாழமாட்டார்கள்.
    - அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்துவந்தான் என நியாயாதிபதிகள் 21:25ல் வாசிக்கிறோம். குடும்பத்திலும் சரி நம்மை ஆள்வதற்கு ஒரு அதிகாரம் இல்லை என்று சொன்னால் அந்த குடும்பம் சீர்கெட்டுப் போகும்.
    - தேவனுடைய அதிகாரத்தை நாம் மதித்து தேவன் நம்மை ஆளும்படி அவருக்கு நம்மை அர்ப்பணிக்கவேண்டும்.
4. மகத்துவங்களை தூஷிக்கிறார்கள் (வச.8)
    - ஒரு தூதனானவன் மற்றொரு தூதனுக்கு விரோதமாக பேசமாட்டான் ஆனால் இங்கு லூசிபர் மிகாவேலோடு தர்க்கித்துப்பேசுவதை பார்க்கிறோம் (9). மிகாவேலோ சாத்தானோடு வாக்குவாதம் பண்ணாமல் தேவன் உன்னை கடிந்து கொள்வார் என்று கூறுகிறான்.
    - வேதாகமத்தில் மிகாவேலின் பெயர் நான்கு இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. நான்கு இடங்களிலும் யுத்தத்தோடு தொடர்பான காரியங்களை காணலாம் (தானியல் 10:20,21; 12:1; வெளி 12:7 யூதா 9)
    - இந்த சம்பவம் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. இது மோசேயின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது (யூதர்களுக்கு அநேக புத்தகங்கள் உண்டு). தேவன் மோசேயின் சரீரத்தை ஜனங்கள் காணத்தக்கதாக அடக்கம்பண்ணியிருந்தால் அதை ஒரு விக்கிரகமாக மாற்றி அதற்கு ஆராதனை செய்திருப்பார்கள், இதுவே சாத்தானுடைய தந்திரம் ஆகும். பழைய ஏற்பாட்டிலும்கூட வனாந்திரத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை ஜனங்கள் காலப்போக்கில் விக்கிரகமாக மாற்றிவிட்டார்கள்.
5. இவர்கள் எதையும் அறியாது இருக்கிறார்கள் (வச.10). ஆனால் எங்களுக்கு எல்லாம் தெரியும் என்கின்ற சுபாவம் அவர்களிடத்தில் இருக்கிறது. அதினாலே அவர்கள் தங்களை கெடுத்தும் கொள்ளுகிறார்கள்.
    - லவோதிக்கேயா சபையும் இதைப்போலவே தங்களுடைய இயல்பான நிலையை உணராமல் எனக்கு எல்லாம் இருக்கிறது என்ற நிலையில் காணப்பட்டார்கள் (வெளி 3:17)
6. இவர்கள் புத்தி இல்லாத மிருகங்களுக்கு ஒப்பாக இருக்கிறார்கள் (வச.10)
    - உதாரணமாக: பவுலை மாட்டிற்கும் (அப் 9:5). ஏரோதை நரிக்கும் (லூக்கா 13:32) புறஜாதிகளை நாய்க்கும் (மத்தேயு 15:26) ஒப்பிடுவதை காணமுடியும்.

**அவர்களுக்கு ஐயோ (வச.11)**

***இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்.***

- ஐயோ என்பது ஒரு சாபத்தை குறிக்ககூடியதாக இருக்கிறது. பழைய ஏற்பாடு சாபத்தில் முடிகிறது ஆனால், புதிய ஏற்பாடு கிருபையில் முடிகிறது.
  புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்ற சில சாபங்கள்
- யூதா 11 - தவறான உபதேசம்
- கலாத்தியர் 1:8 - தவறான சுவிசேஷம்
- 1 கொரிந்தியர் 16:22 - தவறான விசுவாசம்

கள்ளப்போதகர்களின் செயல்களை பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற மூன்று நபரோடு சம்பந்தப்படுத்தி விளக்குகிறார்.

1. இவர்கள் காயினுடைய வழியில் நடக்கிறார்கள்

காயின் மற்றும் ஆபேல் இருவரும் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வந்ததாக ஆதியாகமம் 4 ஆம் அதிகாரத்தில் வாசிக்கமுடியும்.

- காயின் விவசாயியாக இருந்ததால் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான்
- ஆபேல் மேய்ப்பனாக இருந்ததால் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான்.

கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். காயினையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை.

- ➢ அனேகர் ஆபேலின் பலியில் இரத்தம் இருந்தது ஆனால் காயினுடைய பலியில் இரத்தம் இல்லை என்ற வித்தியாசத்தை கூறுகிறார்கள். ஆனால் உண்மையான வித்தியாசம் ‘விசுவாசம்’ என்பதை எபிரெயர் 11:4ல் வாசிக்கமுடியும். விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்.

காயினுடைய பலி அவனுக்கு மேன்மையானதாக தெரிந்திருக்கலாம் ஆனால், அவன் விசுவாசம் இல்லாமல் செலுத்தினபடியினால் தேவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் கர்த்தருக்கு எது வேண்டுமானாலும் கொடுக்கலாம் அது அல்ல பிரச்சனை ஆனால் விசுவாசத்தோடு கூட நீங்கள் செலுத்த வேண்டும்.

முதலில் தேவன் நம்முடைய காணிக்கையை அங்கீகரிப்பதற்கு முன்பாக நம்மை அங்கீகரிக்கவேண்டும். இங்கு கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். முதலாவது நம்மை அங்கீகரித்தால் மட்டுமே கர்த்தர் நமது காணிக்கையையும் அங்கீகரித்தார். கர்த்தர் நம்மை அங்கீகரிக்கவேண்டும் என்று சொன்னால் நாம் அவரிடத்தில் முழுமையான விசுவாசம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்

- ➢ தேவன் தன்னுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை என்று தெரிந்ததும் காயினுக்கு எரிச்சல் உண்டானது, அவன் முகநாடி வேறுபட்டது. தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனை கொலை செய்தான். மட்டுமல்லாது தேவனிடம் நான் ஆபேலை அறியேன் என்று பொய் சொல்லுகிறான்.

காயின் ஆபேலை கொலை செய்ததற்கான காரணத்தை 1யோவான்3:12ல் காணலாம். தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தம் பொறாமை கொண்டு கொலை செய்தான்.

காயினும் பக்தியுள்ளவந்தான் ஆகவேதான் காணிக்கையை கொண்டு வந்தான் ஆனால் பக்தியின்போர்வையில் இருந்தானே தவிர உண்மையான பக்தி அல்ல. அவன் தேவனிடத்தில் விசுவாசத்தோடு இல்லை.

- ➢ அவன் தன்னுடைய தவறை உணர்ந்து மனம் திரும்புவதற்கு பதிலாக தன்னுடைய சகோதரனை கொலை செய்கிறான்.

நாம் தவறு செய்யும் பொழுது தேவனுக்கு விரோதமாக கோபப்படுவதும், சகோதரனுக்கு விரோதமாக பொறாமை கொண்டு செயல்படுவதைவிட நம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

## 2. பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடுகிறார்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வனாந்திர வழியாக வரும்போது அவர்கள் அம்மோனியர்களை முறியடித்த பிற்பாடு மோவாப் தேசத்திற்கு முன்னேறிவந்தனர். அவர்கள் மோவாபிற்கு அருகே வந்தபோது மோவாபின் ராஜாவாகிய பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாமின் உதவியை நாடினான்.

பிலேயாம் ஒரு தீர்க்கதரிசி. அவன் சொல்லுகிற காரியம் பலிக்கும். ஆகவே, பிலேயாமை அழைத்துவரும்படி அவனிடத்திற்கு பாலாக் ஆட்களை அனுப்பியபோது தேவனை பிலேயாமை நோக்கி, "நீ அவர்களோடே போகவேண்டாம். அந்த ஜனங்களை சபிக்கவும் வேண்டாம். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்றார் (எண்ணாகமம் 22:12). பிலேயாமும் அவர்களுடன் செல்லவில்லை.

- பிலேயாமுக்கு கொடுக்கப்பட்ட வேலை – 'வந்து, இந்த இஸ்ரவேல் ஜனத்தை சபையும்' என்பதே!

இரண்டாவது முறையாக பாலாக் அவர்களிலும் மதிப்பு மிக்கவர்களை அனுப்பின போது அவன் இருதயம் அவர்களோடு போகும்படியான விருப்பம் கொண்டது. காரணம் பாலாம் அவனுக்கு கொடுப்பதாக சொன்ன வெகுமதியின் பேரில் இருந்த ஆசை. தேவனும் அவனை அனுமதித்தார்.

அவன் செய்கிறது தவறு என்று அவனுக்கு தெரிந்தும்கூட (எண்ணாகமம் 22:34) அவன் அந்த வேலையைச் செய்வதில் விருப்பம் கொண்டான். காரணம் பணம்!

தேவன் அவருடைய வார்த்தையின் மூலமாக ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட ஒரு காரியத்திற்காக ஜெபிக்க வேண்டியது அவசியமில்லை.

- தேவன் பிலேயாமிடம் அவர்களோடு போகவேண்டாம் என்று சொன்னார் என்று ஏற்கனவே சொல்லிவிட்டார் - இது தேவனுடைய பூரணமான சித்தம்.

நமக்கு பணம், பதவி, இச்சை ஆகிய சோதனைகள் வரும்போது நாம் நம்முடைய விருப்பத்திற்காக ஜெபிக்கிறோம்.

- இரண்டாவது முறை பிலேயாம் தேவனிடம் ஜெபித்தபோது அவர் அனுமதிகொடுத்தார். இது தேவனுடைய சித்தம் அல்ல அனுமதி.

போகும்வழியில் இவனுடைய பாவத்தை உணர்த்தும்படியாக தேவன் கழுதையை தெரிந்துகொண்டார். தேவனிடம் நான் பாவம் செய்தேன், இது உம்முடைய பார்வைக்கு பிரியமில்லாததாக இருக்குமானால் நான் திரும்பி போய் விடுகிறேன் என்று சொல்லுகிறான். பேச்சில்தான் நான் திரும்பி போய் விடுகிறேன் என்று சொன்னானே தவிர அவனுடைய மனம் எல்லாம் பாலாமிடம் போகவேண்டும் என்பதாகவே இருந்தது. அவனுடைய இருதயம் முழுவதுமாக பணத்தின் மீதான ஆசையால் நிறைந்திருந்தது.

ஆனாலும் பிலேயாம் பாலாமை சந்தித்தபோது, தேவன் 4 முறையும் இஸ்ரவேலை ஆசீர்வதிக்க வேண்டும் என்கின்ற வசனத்தையே அவன் வாயில் போட்டார். தன்னுடைய ஊழியம் அங்கே நிறைவேறாததை கண்ட பிலேயாம் பாலாமிற்கு தவறான ஆலோசனை கொடுக்கிறான்.

இஸ்ரவேல் கூட்டத்தாருக்குள்ளே விபச்சாரம் மற்றும் விக்கிரக ஆராதனை செய்யும்படியான தவறான எண்ணங்களை தூண்டுவதற்கு அந்நிய பெண்களை அந்த கூட்டத்திற்குள்ளே அனுப்பும்படியாக பாலாமிடம் ஆலோசனை சொல்லுகிறான் (வெளி 2:14). பாலாக் அவன் சொன்னது போலவே செய்தான். இத்தகைய பாவத்தின் நிமித்தமாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களை நியாயத்தீர்ப்பாகிய கொள்ளைநோயினால் வாதித்தார். அதனால் இஸ்ரவேலரில் 24 ஆயிரம் பேர் மரித்துப்போனார்கள் (எண்ணாகமம் 25:5, 9; 31:16).

உபத்திரவத்தின் நிமித்தம் இன்றைக்கு அநேகர் கிறிஸ்துவை மறுதலிக்காமல் இருக்கலாம் ஆனால், ஒரு மிகப்பெரிய தொகையை கொடுத்தால் அதற்காக கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள் இன்றைக்கு அனேகம்.

பணத்தின் பின்னே ஓடிப்போய் சம்பாதித்துக் கொண்டவர்கள் அதை அனுபவித்ததாக வேதாகமத்தில் சரித்திரம் இல்லை.

- கேயாசி பணத்தின் பின்னே ஓடிப்போய் குஷ்டரோகத்தை தெரிந்துகொண்டான்.
- யூதாஸ்காரியோத்து பணத்தின் பின்னே ஓடிப்போய் மரணத்தை தழுவிக்கொண்டான்.

பிலேயாமின் புத்தியீனம் (2 பேதுரு 2:16)

- கழுதை பேசினபோது பிலேயாம் ஆச்சரியப்படவில்லை.
- கழுதை தேவனுடைய தூதனை காணமுடிந்தது ஆனால் தேவனுடைய தீர்க்கதரிசி காணமுடியவில்லை. அவன் தன்னுடைய தரிசனத்தை இழந்துபோனான்.
- தன்னுடைய அக்கிரமத்திற்காக கடிந்து கொல்லப்பட்டான்.
  - ➢ பிலேயாமின் தவறு - தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போனது
  - ➢ பிலேயாமின் பேராசை - பணத்தின் மீதிருந்தது.

○ பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கிறது (1 தீமோத்தேயு 6:10)

○ தேமா இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைத்து பவுலை விட்டுப்போனான் (2 தீமோ 4:10)

○ போதும் என்கின்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் (1 தீமோ 6:6) தெய்வபக்தியும் உலகமும் ஒன்றாக சேர்ந்து இருக்கமுடியாது.

பணம் நம்முடைய எஜமானாக இல்லாமல் நம்முடைய வேலைக்காரனாக இருக்க வேண்டும். நாம்தான் பணத்தை ஆளுகை செய்யவேண்டும்.

❖ எப்படி பிலேயாமுடைய ஆலோசனையால் இஸ்ரவேல் ஜனங்கள் பாவத்திற்கு ஆளானார்களோ, அதுபோல கள்ளபோதகர்கள் தவறான உபதேசத்தின் மூலம் ஜனங்களை தவறான வழியில் நடத்துகிறார்கள்.

3. <u>கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளானவர்கள்</u>

கோராகை குறித்து எண்ணாகமம் 16ம் அதிகாரத்தில் வாசிக்கமுடியும். லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகு என்பவன் ரூபன் வம்சத்திலுள்ள எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும்கூட மோசேக்குமுன்பாக எழும்பி,மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள் (16:1 - 3).

- லேவி கோத்திரத்தில் பிறந்த கோராகு, ரூபன் கோத்திரத்தில் உள்ளவர்களையும், சபைக்கு முக்கியமானவர்களையும் வைத்து தன்னுடைய சுயலாபத்திற்காக ஒரு கூட்டத்தை உருவாக்கி பிரிவினையை உருவாக்குகிறான்.
  - ➢ தேவன் எப்பொழுதுமே பெருகப்பண்ணுகிறவராக இருக்கிறார் (அப்2:42) ஆனால் பிசாசு பிரிவினைக்கு காரணமாக இருக்கிறான்.
- மோசேக்கு விரோதமாய் எழும்புகிறான். தேவன் அதிகாரத்திற்காக மோசேயை நியமித்தார் ஆனால் கோராகு தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரத்தை எதிர்த்தவனாக காணப்பட்டான்.
- கீழ்ப்படிய மனமில்லாமல் தானும் ஒரு பெரிய தலைவனாக வேண்டும் என்ற விருப்பம் உள்ளவனாக காணப்பட்டான்.

லேவி கோத்திரத்தில் ஆரோன் குடும்பத்தாருக்கு மட்டுமே ஆசாரிய பட்டம் போய் சேரும் இது தேவனுடைய நியமனம். ஆனால் லேவியரையோ, கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன் நின்று அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவும், தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து பிரித்தெடுத்தார். இது போதாதென்று கோராகு தனக்கும் அந்த ஆசாரியபட்டம் வேண்டும் என்று பிரச்சனையை எழுப்புகிறான் (எண் 16:10). இதற்கு கூட்டாக தாத்தானையும், அபிராமையும், ஓனையும் மற்றும் 250 பிரபலமானவர்களையும் சேர்த்துக்கொள்கிறான்.

மோசே தாத்தானையும் அபிராமையும் அழைத்தனுப்பினான். ஒருவேளை மோசே அவர்களிடத்திலே தனிப்பட்ட முறையிலே சமாதானப்பேச்சு நடத்துவதற்கு அழைத்தனுப்பி இருக்கலாம். அவர்கள்: நாங்கள் வருகிறதில்லை என்றார்கள். மேலும், இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டுவந்தது அற்பகாரியமோ, எங்கள்மேல் துரைத்தனமும் பண்ணப்பார்க்கிறாயோ? மேலும் நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவந்ததும் இல்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும்

சுதந்தரமாகக் கொடுத்ததும் இல்லை; இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்கப்பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்.

பிரிவினையை கொண்டு வருவதற்கு ஒரு மனிதன் போதும். லேவி குடும்பத்திலிருந்து வந்தவனே மற்றொரு லேவிக்கு விரோதமாக எழும்புகிறான்

- நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும் (1 தீமோ 5:17). அவர்களுக்கு விரோதமாக எழும்பகூடாது (எண் 16:3)
- தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கிற எல்லா அதிகாரத்திற்கும் கீழ்ப்படியவேண்டும் (1 பேதுரு 2 13 14 17)
  - ➢ பொதுவாக நாம் மற்றவர்களை அதிகாரம் செலுத்த விரும்புகிறோம் ஆனால் மற்றவர்கள் நம் மீது அதிகாரம் செலுத்துவதை அனுமதிப்பதில்லை.
  - ➢ நாம் பிரபலமாக வேண்டும் என்று விரும்புகிறோம் ஆனால் மற்றவர்களுக்கு கீழ்ப்படிய நமக்கு விருப்பமில்லை. இது எல்லா மனிதர்களுக்கும் இருக்கக்கூடிய பிரச்சனையே!

<u>தேவனுக்கு எதிராக செயல்பட்டதின் விளைவு</u>

மோசே ஜெபிக்கிறான் (எண் 16:4). பூமி தன் வாயைத் திறந்து, கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது; இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள் (எண் 16:32,33). ஆனால், கோராகின் பிள்ளைகள் மரிக்கவில்லை (எண் 26:11). அவர்கள் தேவனுடைய மகிமையைக் கண்டு பின்நாட்களில் அவர்கள் தேவ பக்தியுள்ள பிள்ளைகளாக மாறி, அனேக சங்கீதங்களை எழுதினார்கள்.

**<u>கள்ளப் போதகர்கள் குறித்ததான ஆறு உருவகங்கள் (வச.12,13)</u>**

***இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப் போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது.***

1. <u>அன்பின் விருந்துகளில் கறைகளாயிருக்கிறார்</u>

சில மொழிபெயர்ப்பில் அவர்கள் மறைந்திருக்கிற பாறைகளாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடல் பிரயாணத்தில் சில பாறைகள் நாம் காணமுடியாத அளவுக்கு மறைந்திருக்கும். அவைகள் கப்பலை உடைந்து போகக்கூடிய அளவுக்கு சேதப்படுத்தும். அப்படிப்போல இந்த கள்ளப்போதகர்கள் நம்முடைய விசுவாசக்கப்பலை சேதப்படுத்துகிறவர்களாக காணப்படுகிறார்கள் .

2. <u>தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்.</u>

மேய்ப்பன் என்பவன் தன்னுடைய ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிறவனாக காணப்படுவான் (யோவான் 10:10). ஆனால் இவர்களோ தங்களுடைய ஆதாயத்துக்காக செயல்படுகிறவர்களாக இருக்கிறார்கள்.

3. <u>தண்ணீரற்ற மேகங்கள்</u>

செயலற்ற வாக்குறுதிகள். உண்மையான தேவையாகிய தண்ணீர் இல்லாத நிலை.

4. <u>கனியற்ற மரங்கள்</u>

இரண்டுதரஞ் செத்துபோனவைகள். வேரும் செத்துப்போயிற்று; கனிகளும் செத்துப்போயிற்று; வேரற்றுபோகுதல் என்பது தண்டனையை குறிக்கிறது (லூக்கா 3:9), ஆனால் ஆசிர்வதிக்கப்பட்ட மனிதன் தண்ணீரண்டை நாட்டப்பட்ட ஒரு மரத்தைப் போல செழிப்பாக காணப்படுவான் (சங்கீதம் 1:3)

5. <u>அமளியான கடலலைகள்</u>

அலைகள் அதிகமாக வரும், போகும். ஆனால் விளைவு நுரை மட்டுமே; அந்த நுரையும் கொஞ்ச நேரம் மட்டுமே காணப்படும். அதிகமான செயலை செய்வதுபோல காணப்படுவதனால் அவர்கள் கனிகொடுப்பவர்களாக இருக்கமுடியாது.

6. <u>மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள்</u>

சில நட்சத்திரங்கள் எந்த ஒரு நோக்கமும் இல்லாமல் கடந்துபோகும். இந்தக் கள்ளப்போதகர்களும் எந்த ஒரு நோக்கம் இல்லாமல் வாழ்கிறவர்கள்.

**<u>தீர்க்கதரிசனங்கள் (வச. 14 - 19)</u>**

a. <u>ஏனோக்கு (வச.14 - 16)</u>

***ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப்பேசும்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்.***

இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் இரண்டாவது பகுதியை குறித்து தீர்க்கதரிசனம் சொன்னவன். வேதாகமத்தில் மூன்று இடங்களில் மட்டுமே ஏனோக்கு குறித்து நாம் வாசிக்க முடியும்

- ஏனோக்கின் வம்ச வரலாறு மற்றும் அவன் தேவனோடுகூட நடந்தது (ஆதி 5:21 - 24)
- விசுவாசத்தினாலே அவன் தேவனை பிரியப்படுத்தினான் (எபி 11:5)
- இயேசுகிறிஸ்துவின் வருகையை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தவன் (யூதா 14 - 16)
  - ➢ இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையை குறித்து வேதாகமத்திற்கு வெளியில் இருந்து மேற்கோள் காட்டுகிறார் (வச.14,15). ஏனோக்கின் புத்தகம் - இது யூதர்கள் வைத்திருந்த புத்தகம்.
  - ➢ பவுலும் கூட வேதாகமத்திற்கு வெளியில் உள்ள புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டினர் சில பகுதிகளை நாம் காணலாம்
    - ❖ அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர்: நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 17:28)
    - ❖ கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களில் ஒருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான் (தீத்து 1:12)

ஏன் பவுல் மற்றும் யூதா இதை குறிப்பிட்டு காண்பிக்கிறார்கள் என்றால்... அந்த புத்தகத்தை வாசிப்பவர்கள் இந்த காரியங்களை நன்றாக அறிந்தவர்களாக இருந்ததினால் மேற்கோள்களை குறிப்பிடுகிறார்கள்.

<u>அவிசுவாசிகளுக்கு இருக்கக்கூடிய இரண்டு விதமான நியாயத்தீர்ப்பை குறித்து 14 மற்றும் 15 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம்.</u>

1. அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளுக்கும் (வச.14),
   - ➢ துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிறவர்கள் (வச.18)
2. அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றிற்கும் (வச.15),
   - ➢ முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும் - ஒருபோதும் திருப்தி அடையாதவர்கள்.
   - ➢ இறுமாப்பானவைகளைப்பேசி; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள் (வச.16)

**அவர்கள் தீமையை விரும்பி ஒழுக்கமில்லாத வாழ்க்கை வாழ்ந்து அவபக்தியான பரிசுத்தம் இல்லாத வாழ்க்கை வாழ விரும்புகிறார்கள்.**

அவிசுவாசிகள் மட்டுமல்ல விசுவாசிகளுக்கும் நியாயத்தீர்ப்பு இருக்கிறது. நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

<u>எதற்காக நியாயதீர்ப்பு கொடுப்பார்?</u>

1. பிர 3:17 – சகல (நல்ல & கெட்ட) எண்ணங்களுக்காக.
   - தேவன் நமது இருதயத்தை பார்க்கிறார்.

  - நமது நினைவுகளை அறிந்திருக்கிறார்.

2. பிர 12:14; சங் 62:12; ரோமர் 2:6 – சகல செயல்களுக்காக
   மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தாலும் அவனது ஒரே செயலின் நிமித்தம் (பேசவேண்டிய கன்மலையிடம் அடித்தான்) கானானுக்கு போகமுடியவில்லை. நாம் எம்மாத்திரம்? அநேக நல்ல காரியங்களை செய்யலாம் ஆனால் சிறிய பாவமானாலும் தேவன் நியாயத்தில் கொண்டுவருவார்.
3. ரோமர் 2:16 – நமது அந்தரங்கங்களுக்காக.
   நாம் அந்தரங்கத்தில் என்ன பார்க்கிறோம், கேட்கிறோம், வாசிக்கிறோம் என்பதையெல்லாம் தேவன் நியாயத்தில் கொண்டுவருவார். தாவீது தான் செய்தது ஒருவருக்கும் தெரியாது என நினைத்தான் ஆனால் தேவன் நாத்தான்வேல் மூலம் அவனது பாவத்தை வெளிப்படுத்தினார்.
4. மத் 12:36,37 – நாம் பேசின எல்லா வீண் வார்த்தைகளுக்காக
   நாம் பேசும் வார்த்தைகளினாலே நாம் யார் என்று அறியப்படுவோம்.
     - எபே 5:4 – தேவையில்லாத வார்த்தைகளை விட்டுவிட்டு, தேவையான வார்த்தைகளை (நன்றி செலுத்துதல்) பயன்படுத்துவோம்.

b. <u>அப்போஸ்தலர்களின் தீர்க்கதரிசனம் (17 - 19)</u>

***நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள். கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே. இவர்கள் பிரிந்து போகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே.***

அப்போஸ்தலர்கள் கடைசி காலத்தில் இருக்கக்கூடிய மனிதர்களுடைய நிலையைக் குறித்து பேசியிருக்கிறார்கள்.

i. <u>பவுல்: 2 தீமோத்தேயு 3:1 - 5</u>
   மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.

ii. <u>பேதுரு: 2 பேதுரு 3</u>
   - தங்கள் சுயஇச்சைகளின்படியே நடக்கிறவர்கள் (வச.3)
   - அவர்கள் பரிகாசம் பண்ணுகிறவர்கள் (வச.4)
   - அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காதவர்கள் (வச.6).

   **இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே (யூதா 19).** கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோமர் 8:9). இவர்களை விசுவாசிகளின் பட்டியலிலேயே சேர்க்கமுடியாது.

மூன்றாவது வசனத்தில் விசுவாசிகளிடம் விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுங்கள் என்று அறிவுறுத்தின யூதா, இப்பொழுது 17வது வசனத்தில் அப்போஸ்தலர்கள் மூலம் கொடுத்த வார்த்தைகளை நினைவு கூறும்படியாக கேட்டுக்கொள்கிறார். இந்த வசனங்களுக்கு இடையே சபை எதிர்கொண்டிருந்த கள்ளப்போதகர்கள் குறித்து விவரித்து காண்பித்தார். யூதாவின் முக்கிய நோக்கமே விசுவாசிகளை கட்டி எழுப்பி அவர்களை ஊக்கப்படுத்துவது தான்.

<u>கிறிஸ்தவ வாழ்க்கையின் கடமைகள் (வச.20 - 23)</u>

***நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப்பெறக் காத்திருங்கள்.***

*அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்.*

நீங்களோ பிரியமானவர்களே என்று ஆரம்பிக்கிறார்... வசனங்கள் 3, 17, 20 ஆகிய வசனங்களில் யூதா விசுவாசிகளை பிரியமானவர்களே என்று அழைக்கிறார்.

1. <u>உங்கள் மகாபரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.</u>

ஆங்கில வேதாகமத்தில் building up yourself என்று வாசிக்கிறோம். Building அதாவது கட்டுதல் என்பது ஒழுங்குபடுத்துவதை குறிக்கிறது. கட்டுதல் என்று சொல்லும்போது ஏதோ ஒரு புதிய உபதேசத்தை சேர்த்துக் கொள்ளுவது என்பது அர்த்தமல்ல ஏற்கனவே போடப்பட்ட அஸ்திபாரமாகிய கிறிஸ்துவின் மேல் உறுதியாக இருக்க வேண்டும் என்பதாகும். மூன்றாம் வசனத்தில் விசுவாசத்திற்காக போராட வேண்டும் என்று சொல்லுகிறார். 20ம் வசனத்தில் உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

பரிசுத்தம் என்று சொல்லும்பொழுது பிரித்தெடுக்கப்படுதல் என்பது அர்த்தமாகும். பழைய ஏற்பாட்டில் தேவாலயம், ஆசாரியன், ஓய்வுநாள் இவைகள் மற்றவைகளிலிருந்து பிரிந்து காணப்பட்டது. அதுபோல நம்முடைய விசுவாசமும் தனிப்பட்ட ஒரு சிறப்பானதாக காணப்படுகிறது. ஆக, நம்முடைய விசுவாசம் மேன்மை உள்ளதாக இருக்கிறபடியால் அந்த விசுவாசத்திலே நாம் உறுதியாக இருந்து அதை காத்துக் கொள்ள வேண்டும். அது மகா பரிசுத்தமானது.

பேதுரு சொல்லும்பொழுது 'அருமையான விசுவாசம்' என்றும் (2பேதுரு 1:1); 'விலையேறப்பெற்ற விசுவாசம்' என்றும் (1பேதுரு 1:7) குறிப்பிடுகிறார். ஆபிரகாம் விசுவாசத்தினாலே 'தேவனுடைய சிநேகிதன்' எனப்பட்டான் என்று யாக்கோபு குறிப்பிடுகிறார் (யாக்கோபு 2:23). இது ஆரம்ப காலத்தில் ஆபிரகாம் தேவனிடத்தில் வைத்த விசுவாசம் அல்ல; அவனுடைய தேவனோடுகூட வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுது அவனுக்கு ஏற்பட்ட விசுவாசமாகும். கிறிஸ்துவோடு கூட நாம் எந்த அளவுக்கு நெருக்கமாக இருக்கிறோமோ அந்த அளவுக்கு நாம் விசுவாசத்தில் வளரமுடியும்.

ஒரு விசுவாசி உபத்திரவம் மற்றும் பாடுகள் மத்தியில் நிலைத்திருக்கும்போது மட்டுமே அவனுடைய விசுவாசம் எப்படிப்பட்டது என்பதை விளங்கிக்கொள்ளமுடியும் (வெளி 13:10; 14:12). பெர்கமு சபையில் அந்திப்பா கொல்லப்பட்ட போதும்கூட அந்த சபையார் விசுவாசத்தில் உறுதியாய் இருந்தார்கள் (வெளி 2:13). ஆனால் இன்றைய கிறிஸ்தவர்கள் பாடுகள் வரும்பொழுது விசுவாசத்தை விட்டு விலகி விடுகிறார்கள்.

எபிரெயர் பதினோராம் அதிகாரத்தில் விசுவாசத்தினாலே அனேக காரியங்களை சாதித்த விசுவாச வீரர்களுடைய பட்டியலை காணமுடியும், அதேசமயம் அந்த விசுவாசத்திற்காக தங்களுடைய சரீரத்திலே துன்பத்தையும் அனுபவித்து அதற்காக ஜீவனையும் கொடுத்தவர்களும் உண்டு.

2. <u>பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுங்கள்.</u>

கர்த்தரை நோக்கி கூப்பிடுதல் (ஆங்கிலத்தில் cry) என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரமல்ல; நம்முடைய வாழ்நாள் முழுவதும், தினமும் அதை நாம் கடைபிடிக்கவர்களாக இருக்க வேண்டும் (சங்கீதம் 86:3). ஒரு குழந்தை பிறந்ததற்கான அடையாளம் அழுகை. பரிசுத்த ஆவிக்குள் ஜெபியுங்கள் என்று சொல்லும்பொழுது நம்முடைய ஜெபமானது தேவனுடைய சித்தத்தின்படியும், வேதவசனத்தின்படியும் இருக்க வேண்டும். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படிகேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் (1 யோவான் 5:14). ஜெபம் இல்லாத கிறிஸ்தவன் வல்லமை இல்லாத கிறிஸ்தவனாக இருக்கிறான். ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26).

3. <u>தேவனுடைய அன்பிலே உங்களை காத்துக்கொள்ளுங்கள்</u>

தேவனுடைய அன்பு அகாபே அன்பு ஆகும். அது மிகவும் உயர்ந்த, தியாகமுள்ள அன்பாக இருக்கிறது. எபேசு சபையானது ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டதாக வாசிக்கிறோம். நம்மை பாதுகாப்பது தேவனுடைய அன்பே; நாம் சுயமாக நம்மை காத்துக்கொள்ள முடியாது. தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் நாம் அவரிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்பதே. பேதுருவிடம் என்னை நேசிக்கிறாயா?

என்று அவர் கேட்கும்பொழுது அவருடைய உள்ளத்திலிருந்து வெளிப்பட்டஏக்கத்தை நாம் காணமுடியும். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் (1யோவான் 5:3). இங்கே தேவனுடைய அன்பை சூரிய ஒளியுடன் ஒப்பிடலாம். சூரியன் எப்போதும் பிரகாசிக்கிறது. ஆனால் நமக்கும் சூரியனுக்கும் இடையில் ஏதாவது வரும்போது, நாம் சூரிய ஒளியை அனுபவிக்க முடியவில்லை,. அதுபோலவே தேவனுடைய அன்பானது எப்போதும் நம்மீது வீசுகிறது. ஆனால் நமக்கும் கர்த்தருக்கும் இடையில் பாவம் வந்தால், நாம் அவருடைய அன்பை நடைமுறையில் அனுபவிக்கமுடிவதில்லை.

4. <u>நித்திய ஜீவனுக்கேதுவாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள்</u>

கவனித்து இருங்கள் (Look) என்று KJVயில் பார்க்கிறோம். இது தேவன் அவருடைய மக்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்கான உடனடி வருகையை குறிக்கிறது. இருள் மற்றும் விசுவாச துரோகத்தின் நாட்களில், ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையின் ஒளியை நம் இதயங்களில் எரிய வைக்க வேண்டும். இது நமக்கு ஆறுதலையும் (1 தெச. 4:18) தூய்மைப்படுத்தும் நம்பிக்கையையும் தருகிறது (1 யோவான் 3: 3). கிறிஸ்துவினுடைய வருகையானது அது அவிசுவாசிகளுக்கு திருடனைப்போல இருக்கும்; அதாவது அவர்கள் ஆயத்தம் இல்லாதவர்களாக இருப்பார்கள். ஆனால் விசுவாசிகளுக்கு அது மணவாளன் வருகை போல இருக்கும்; மணவாட்டி மணவாளனுக்கு ஆயத்தப்பட்டு வருகையை நோக்கி எதிர்ப்பார்த்துக்கொண்டிருப்பாள்.

5. <u>பகுத்தறிவுள்ளவர்களாயிருங்கள்</u>

விசுவாச துரோகத்தால் பாதிக்கப்பட்டவர்களைக் கையாள்வதில் ஆவிக்குரிய பகுத்தறிவு அவசியம். கள்ளப்போதகர்களை கையாளும் விதத்திற்கும், அவர்களால் ஏமாற்றப்பட்டவர்களை கையாளும் விதத்திற்கும் வேதம் வேறுபடுகிறது. கள்ளப்போதகர்களை பொறுத்தவரை "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக்கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவனாயிருக்கிறான் " (2 யோவான் 10, 11). ஆனால் கள்ளப்போதகர்களால் ஏமாற்றப்பட்டவர்களைப் பற்றி பேசும்போது, யூதா ஒரு வித்தியாசத்தை அறிவுறுத்துகிறார், மேலும் இரண்டு தனித்தனியான நடவடிக்கைகளையும் அளிக்கிறார்.

a. <u>சிலருக்கு இரக்கம் பாராட்டி</u> - அதாவது, நாம் அவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும், மேலும் சந்தேகங்கள் மற்றும் சர்ச்சைகளிலிருந்து அவர்களை தெய்வீக சத்தியத்தின் உறுதியான நம்பிக்கைக்கு வழிநடத்த முயற்சிக்க வேண்டும். இயேசு, திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி (மத் 9:36)
b. <u>சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு</u> - கள்ளப்போதகர்களின் போதகத்தால் விசுவாசத்திலிருந்து விலகி தீப்பிழம்புகளில் விழத்தயாராக இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களை காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை. இது நாம் செயல்படவேண்டிய அவசரத்தை காட்டுகிறது.

6. <u>மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத்தள்ளுங்கள்</u>

பழைய ஏற்பாட்டில் ஒரு தொழு நோயாளியின் ஆடையானது தீட்டுபட்டால் அது எரிக்கப்பட வேண்டியது அவசியம் (லேவி. 13: 47–52). ஆகவே, தீட்டுப்பட்டவர்களுடன் பழகும்போது, நமது வாழ்க்கையை அது பாதிக்கும் என்பதை அறிந்து அதை நாம் தவிர்க்க வேண்டும்.

**<u>முடிவுரை (வச.24,25)</u>**

***வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.***

தேவனுடைய வல்லமையானது நாம் விழுந்து விடாதபடி காக்கக்கூடியதாக இருக்கிறது (எபே 3:20; ரோமர் 16:26). மட்டுமல்லாது தேவனுடைய சமூகத்தில் நாம்

பிரசன்னமாகும்போது பாவம் இல்லாதவர்களாக காணப்படுவோம். தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.